செ.வெ.எண்.45 நாள்: 30.05.2019

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியல் தயாரித்தல் தொடர்பான பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) டாக்டர்.மு.வீரப்பன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.**

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியல் தயாரித்தல் தொடர்பான பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) டாக்டர்.மு.வீரப்பன் அவர்களின் தலைமையில் இன்று (30.05.2019) நடைபெற்றது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்துவதற்கான பணிகள் மாநில தேர்தல் ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதல்கட்டமாக வாக்குச்சாவடி பட்டியல்கள் தயாரிக்கும் பணி முடித்து பட்டியல்கள் அச்சடிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறன. அதன் தொடர்ச்சியாக சட்டமன்ற வாக்காளர் பட்டியல்களை அடிப்படையாக கொண்டு வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணியினை தேர்தல் ஆணையம் துவங்கியுள்ளது. இது தொடர்பாக சென்னையில் முதன்மை பயிற்சியாளர்களுக்கு தேர்தல் ஆணையத்தால் பயிற்சி வழங்கப்பட்டது.

மாவட்ட அளவில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிப்பது தொடர்பாக முதன்மை பயிற்றுநர்களால் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (பொது), தேர்தல் உதவியாளர்கள் மற்றும் கணிணி இயக்குநர்கள் ஆகியோருக்கு பயிற்சி வகுப்பு மாவட்ட ஆட்சியரகத்தில் வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) டாக்டர்.மு.வீரப்பன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்த பயிற்சிக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (உள்ளாட்சி தேர்தல்) திரு.அ.சந்திரசேகரன், வட்டார வளர்ச்சி அலுவலர்(தேர்தல்) திரு.பா.பொற்செழியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.